www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

தேர்வு எண்

காலம் : 1-30 மணி **பத்தாம்வகுப்பு - தமிழ்** மதிப்பெண் : 50

## பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். (7x1=7)

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ______
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா
இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2. காய்ந்த இலையும் காய்ந்த் தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள்-இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ) சருகும் சண்டும் ஆ) இலையும் சருகும்
இ) தாளும் சருகும் ஈ) தோகையும் சண்டும்

3. கிழக்கிலிருந்து வீசும் காற்று ______
அ) கோடை ஆ) வாடை இ) தென்றல் ஈ) கொண்டல்

4. "பாடுஇமிழ் பனிக்கடல்பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

5. எழுதுஎழுது என்பது எவ்வகைத் தொடர்
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி
இ) உரிச்சொல்தொடர் ஈ) இடைச்சொல்தொடர்

6. "சிலம்பு அடைந்திருந்தபாக்கம்எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ______
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

7. பின்வருவனவற்றுள் முறையான தொடர் ______
அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

## பகுதி - 2

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. (5x2=10)
(வினா எண் 14 கட்டாய வினா)

8. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!"
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"- இவ்வடியில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

9. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்" என்றவர் பாரதியார்.
ஆ) ஒரு சொல்லோ தொடரோ இருபொருள்பட வருவது இரட்டுறமொழிதல் அணி ஆகும்.

10. கலைச்சொல் தருக. அ) LandBreeze ஆ) Epicliterature

11. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.

12. வசன கவிதை குறிப்பு எழுதுக.

13. சொல்லைக் கண்டுபிடித்து புதிரை விடுவிக்க
அ) பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்
ஆ) இருக்கும் போது உருவமில்லை - இல்லாமல் உயிரினமில்லை

14. 'அறிவு' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

### பகுதி - 3

**III.** ***எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.***
***(வினா எண் 18 கட்டாய வினா)*** **(3x3=9)**

15. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

16. சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

17. தொழில் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

18. 'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டினை அடிபிறழாமல் எழுதுக.

### பகுதி - 4

**IV.** ***மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.*** **(3x4=12)**

19. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

***(அல்லது)***

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

20. உவமை அணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

***(அல்லது)***

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



22. மொழிபெயர்க்க.

The golden sungets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies inpercussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

### பகுதி - 5

**V.** ***அனைத்து வினாக்களுக்கும் விடையளி.*** **(2x6=12)**

23. தமிழ்ச்சொல் வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

***(அல்லது)***

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதியைக் கொண்டு விவரிக்க.

24. 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

***(அல்லது)***

குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - விருந்தோம்பல் - விருந்தினரை வரவேற்றல் - இலக்கியத்தில் விருந்தோம்பல் - விருந்தோம்பும் முறைகள் - முடிவுரை.



www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner